ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය

අති විශෙෂ

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

அதி விசேஷமானது

අංක 2327/04 - 2023 අප්‍රේල් මස 11 වැනි අඟහරුවාදා - 2023.04.11

2327/04 ஆம் இலக்கம் - 2023 ஆம் ஆண்டு ஏப்பிறல் மாதம் 11 ஆந் திகதி செவ்வாய்க்கிழமை

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)

# பகுதி I : தொகுதி (I) - பொது

## அரசாங்க அறிவித்தல்

ச.வ.பீ. 94/47 (VIII)

**(269 ஆம் அத்தியாயமான) நாடு, நகரத் திட்டமிடல் கட்டளைச் சட்டம்**

6(2) (ஆ) மற்றும் 21(2) (ஆ) என்னும் பிரிவுகளின் கீழான கட்டளை

(269 ஆம் அத்தியாயமான) நாடு, நகரத் திட்டமிடல் கட்டளைச் சட்டத்தின் 6(2) (ஆ) என்னும் பிரிவிலும் 21(2)(ஆ) என்னும் பிரிவிலும் எனக்குரித்தாக்கப்பட்டுள்ள தத்துவங்களின் பயனைக் கொண்டு, நகர அபிவிருத்தி மற்றும் வீடமைப்பு அமைச்சரான பிரசன்ன ரணதுங்க ஆகிய நான், இக்கட்டளை மூலம்.

(அ) இதற்கான அட்டவணையில் குறித்துரைக்கப்பட்ட இடப்பரப்பானது “கிரிமெட்டியபான ஸ்ரீ சுதம்மவங்ஷாராம மஹா விஹாரை” என அழைக்கப்படும் காணி இடப்பரப்பு மேற்சொல்லப்பட்ட கட்டளைச் சட்டத்தின் நோக்கத்துக்காக, நகர அபிவிருத்தி இடப்பரப்பொன்றாகவிருத்தல் வேண்டுமென வெளிப்படுத்துகின்றேன் ; அத்துடன்

(ஆ) நகர அபிவிருத்தி இடப்பரப்பொன்றாக மேலே வெளிப்படுத்தப்பட்டதான கிரிமெட்டியபான ஸ்ரீ சுதம்மவங்ஷாராம மஹா விஹாரைக்கான உருவரைப் பௌதீக திட்டமொன்று தயாரிக்கப்பட வேண்டுமெனவும் பணிக்கின்றேன்.

**பிரசன்ன ரணதுங்க** (பா. உ.),
நகர அபிவிருத்தி மற்றும் வீடமைப்பு அமைச்சர்.

கொழும்பு,
2023, மாச்சு 27.

1A - G 39319 — 16 (2023/04)

இவ் அதிவிசேட வர்த்தமானியை www.documents.gov.lk எனும் இணையத்தளத்திலிருந்து பதிவிறக்கம் செய்ய முடியும்.

**அட்டவணை**

**கிரிமெட்டியபான ஸ்ரீ சுதம்மவங்ஷாராம மஹா விஹாரை இடப்பரப்பினைக் கொண்ட பிரதேசம்**

வடமேல் மாகாணத்தின், புத்தளம் மாவட்டத்திலுள்ள தங்கொட்டுவ பிரதேச செயலாளர் பிரிவுக்குட்பட்ட தெற்கு பிடிகல் கோறளை சிறிபிரிவினுள், கிரிமெடியான கிராமத்தில் அமைந்துள்ள, நிலஅளவையாளர் தலைமையதிபதியின் 2020, சனவரி மாதம் 15 ஆந் திகதியைக் கொண்டு சுவட்டு இல. PU/ DSO/ 2009/ 414 என்பதில் குறித்துக்காட்டப்பட்டுள்ளவாறாக விஹாரவத்த தெல்கஹஹேன தேக்கவத்த பின்கும்புற என அழைக்கப்படும் அக்காணியின் இடப்பரப்பு அடங்களும் அதன் எல்லைகள் பின்வருமாறு :-

காணித்துண்டு - ஏ "விஹாரவத்த தெல்கஹஹேன தேக்கவத்த பின்கும்புற"

வடக்கு : வீதி, மாலினீ சந்திரகீர்த்தி உரிமைகோரும் தேக்கவத்த, சுபசிங்க ஜினரத்ன உரிமைகோரும் போகஹஓவிட்ட, சுபசிங்க ஜினரத்ன உரிமைகோரும் உஸ்வத்த கும்புற, கந்தேவத்த மற்றும் பிரதேச சபை வீதி

கிழக்கு : பிரதேச சபை வீதி மற்றும் மாகாண வீதி அபிவிருத்தி அதிகாரசபை வீதி

தெற்கு : மாகாண வீதி அபிவிருத்தி அதிகாரசபை வீதி

மேற்கு : மாகாண வீதி அபிவிருத்தி அதிகாரசபை வீதி, வீதி, மாலினீ சந்திரகீர்த்தி உரிமைகோரும் தேக்கவத்த, சுபசிங்க ஜினரத்ன உரிமைகோரும் போகஹஓவிட்ட.

EOG 04 - 0078